# மாலைக்கதிர்
Maalaikkathir








சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 19 புதன்கிழமை 04.11.2024 கதிர் 423


# கடந்தகால வரலாற்றை புரிந்துகொள்ளுங்கள்

## கற்றறிந்தோருக்கு ஈ.பி.ஆர்.எல். எவ் சுரேஷ் அறிவுரை!



“தேசிய மக்கள் சக்தியானது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று நம்பக்கூடிய தமிழ் புத்திஜீவிகள், கல்வியாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் கடந்த கால வரலாற்றை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்“ என்றும், “தம்மைத் தற்காத்துக் கொள்ள தமிழர்கள் எடுக்கும் முயற்சிகள் இனவாதம் ஆகாது. மாறாக தமிழ் மக்களது மொழியை, கல்வியை, கலாசாரத்தை, மத நம்பிக்கைகளை அழிக்க வேண்டுமென்றும் சிங்கள குடியேற்றங்களினூடாக தமிழர்களின் இருப்பை இல்லாமல் செய்ய வேண்டுமென்றும் நடைபெற்ற அனைத்துமே சிங்கள மேலாதிக்க இனவாதத் தன்மை கொண்டவை தான்” என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி யின் பிரமுகர்கள் மாகாணசபை அமைப்புத் தொடர்பாக அண்மையில் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் : அவற்றுக்கும் பதிலளிக்கும் வகையில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவரது அந்த அறிக்கையில், “ ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது மாகாணசபை முறைமைகள் பாதுகாக்கப்படும் என்றும், அதற்கான தேர்தல் விரைவாக நடத்தப்படும் என்றும், அதிலுள்ள அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதியினாலும் அவருடன் இருக்கக்கூடிய ஏனைய கட்சி உறுப்பினர்களாலும் பிரசாரம் செய்யப்பட்டது. வேறுபல உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் மேற்கண்ட உறுதிமொழியானது முக்கியத்துவமானதும் முதன்மையானதுமாகும்.

7►

# புலிகளின் படத்தைப் பதிவேற்றிய இளம் குடும்பஸ்தருக்கும் பிணை!

யாழ்ப்பாணம், டிச. 04

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் - இனுவில் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தருக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தினால் நிபந்தனையுடனான பிணை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இரண்டு இலட்சம் ஷரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவித்த நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா வெளிநாட்டு பயணத் தடையும் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரது புகைப்படங்களை முகப்புத்தகத்தில் பதிவேற்றினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, கடந்த 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்ட அளவோடை வீதி, இனுவில் மேற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய மனோகரன் கஜந்தஷரூபன் என்பவரின் வழக்கு நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இன்று விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பிணை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனோகரன் கஜந்தஷரூபன் கடந்த 01ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை இன்று 04 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

# சமூக செயற்பாட்டாளர் கெலும் ஜயசுமணவுக்குப் பிணை!



(கொழும்ப, டிச 04)

மாவீரர்நாள்நினைவேந்தல் தொடர்பான பழைய புகைப்படங்களைத்தனது சமூக வலைதளங்களில் பகிர்ந்ததன் மூலம் பொது அமைதிக்குப் பங்கமேற்படுத்த முனைந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளர் கெலும் ஜயசுமண பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் சமூக செயறபாட்டாளர் கெலும் ஜய சுமணவுக்கு இன்று பிணை வழங்கியது.

முன்னொரு காலத்தில் வடக்கில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளின் புகைப்படங்களை முகப்புத்தகத்தில் பகிர்ந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கெலும் ஜய சுமண விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பிரான்சில் உள்ள பெண் ஒருவரது முகப்

7►

# தேங்காய் விலை ரூபா 130/-

கொழும்பு, டிச 04

பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்கு நாடெங்கிலும் உள்ள சதொச விற்பனை நிலையங்களுக்கு ஊடாகக் கட்டுப்பாட்டு விலையில் தேங்காயை விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வர்த்தக, வாணிபத் துறை அமைச்சர் வசந்த சமரசிங்ஹ இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “அரிசி, தேங்காய் உட்பட பண்டிகைக் காலத்துக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களைத் தடையின்றிக் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நாளாந்தம் இரண்டு இலட்சம் கிலோகிராம் அரிசியை வழங்குவதற்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் இணங்கியுள்ளனர். அந்த விநியோகம் அரசாங்க விற்பனை வலையமைப்பான சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக வழங்கப்படும். அதே போல சுமார் பத்து இலட்சம் தேங்காய்களையும் இரு வார காலத்துக்கு சதொச விற்பனை நிலையங்களினுடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன” என்றார். (ஐ-05)

# முன்னாள் எம்.பி ஹிருணிகா வழக்கிலிருந்து விடுவிப்பு !

கொழும்பு, டிச 04

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தி அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை இன்று நிறைவு செய்த மேன முறையீட்டு நீதிமன்றம், குறித்த குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை விடுவிக்க உத்தர விட்டது.

இந்த வழக்கு தொடர்பில், கல்கிசை நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கமைய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்தினை மீளப் பெறுவதாகவும், இனிமேல் அவ்வாறான கருத்துக்களை வெளியிடப்போவதில்லைஎனவும் ஹிருணிகா பிரேமச்சந்திர தனது சட்டத்தரணி ஊடாக அறிவித்ததையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வின் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (ஐ-07)



# ரத்த பூமி

உலக நாடுகள் தமது இலாப வெறி நோக்கத்துக்காகவும், அடுத்தவர் நிலத்தைக்கைப்பற்றும் முயற்சியும், எண்ணெய் வயல்கள் எரிபொருள் மூலங்களையும் இயற்கை வளங்களையும் தன்வயப்படுத்தவும், தனது வல்லாண்மையை நலைநாட்டவும், பிறரை அச்சுறுத்தவும், நேச நாடுகள் பக்கம் இருக்கிறது என்று குற்றச்சாட்டியும், ஜி8 நாடுகள் இல்லை என்று காரணம் காட்டியும், தீவிரவாதத்தை வளர்த்து விடுகிறது என பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி வரலாறு நெடுகிலும் அதிகாரபூர்வ வெளிப்படையான ஆக்கிரமிப்பு போரினை பிற நாடுகளில் மேற்கொண்டு வருவதை நாம் கேட்டும், படித்தும், கண்டும் வருகிறோம்.

ஆதிகாலத்திலிருந்து எல்லா வகையிலும் மேம்பட்ட நிலையில் வளமான நிலையில் முன்னேறிய நிலையில் உள்ள அறிவார்ந்த மனித சமூகம், போரினை முன்னெடுக்கும் இழி செயலானது, ஆதிகாலத்து மனிதனை விட இன்னும் பின்தங்கிய காட்டுமிராண்டி மனிதன்தான் என்பதை மெய்ப்பிப்பதாக உள்ளது.

இயற்கையைச் சுரண்டி தனக்கு வளமான வாழ்வை அமைத்துக் கொள்ளும் அறிவார்ந்த மனித சமூகம்,போர் மூலம் சக மனிதனை கண்மூடித்தனமாக கொல்லும் ஈவு இரக்கமற்ற கொடூர




செயலை எவ்வகையிலும் நியாயப்படுத்துவதை ஏற்க முடியாது.

குளிரூட்டப்பட்ட பளிங்கு அறைக்குள்ளிருந்து “கோட்டு சூட்டு “போட்ட ஒரு சில மனிதர்கள் மேற்கொள்ளும் போர் நடவடிக்கைகள் எங்கோ இருக்கும் ஏதுமறியா அப்பாவி பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட சாதாரண குடிமக்கள் குற்றுயிரும் குலையுயிருமாக துண்டு துண்டாகி விழுந்து துடிதுடித்து உயிரையும் தம் உடைமைகளை இழப்பதை: இரசிக்கும் கொடூர எண்ணம் கொண்டவர்கள் இப்பூவுலகில் இருந்து முற்றாக துடைத்தெறியப்பட வேண்டியவர்கள்.

ஒரு நாட்டின் மீது குறிவைத்து தொடுக்கப்படும் போரானது அந்நாட்டின் மனித வளம், அமைதி, இயற்கை வளம், சொத்துகள், பொருளாதாரம் என அனைத்தையும் சீரழித்து விடுகிறது. இதனால் வறுமை, பசி, பட்டினி, உள்நாட்டு குழப்பம், உறுதியற்ற தன்மை, அகதிகளாக இடப்பெயர்வு என போருக்கு உள்ளாகும் நாடு ஒன்றும் இல்லாமல் வெறுமையாக்கி விடப்படுகிறது. இந்நாடுகள் மீண்டெழுந்து இயல்பு நிலைக்கு திரும்ப பல்லாண்டுகள் தேவைப்படுகின்றன.

மிக அண்மையில் நடந்து முடிந்த வளைகுடாப் போர்கள், ஆப்காஸ்தான் மீதான போர் , ஈராக் , சிரியா, பாலஸ்தீனம் , தமிழீழம் மீதான போர்கள் என பல நாடுகளின் மீது நிகழ்த்தப்பட்ட வன்போர்களின் முடிவினை இன்றைய தலைமுறையினர் கண்கூடாக அறிந்திருக்கிறோம்.



உலக அணு வல்லரசு நாடுகள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்கள் மீதான முற்றான இன அழிப்பு போரினை மேற்கொண்ட போது உலக சமூகங்கள் வாய் மூடி மௌனித்து நின்றன.

உலகெங்கும் நடக்கும் போர்களின் கொடூர முகத்தை அவ்வப்போது சில புகைப்படங்கள் வெளிப்படுத்திக் கொண்டு தான் இருக்கின்றன. வியட்நாம் மீதான ஆக்கிரமிப்பு போரின் போது குண்டுவீச்சிலிருந்து காயங்களுடன் தப்பித்து ஆடையின்றி அழுது கொண்டே ஓடி வரும் சிறுமியின் புகைப்படம், ஈராக் மீதான ஆக்கிரமிப்பு போரில் குண்டு வீச்சில் சிதிலமடைந்த கட்டட இடிபாடுகளில் அழுதுகொண்டே தம் பெற்றோரை தேடும் சிறுவனின் புகைப்படம், தமிழீழப் போரின் போது சிறுவன் பாலச்சந்திரன் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டு உயிர் துறந்து கிடக்கும் நிலையில் வெளியான புகைப்படம், ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்பு போரில் தரைமட்டமான தம் குடியிருப்பின் முன்னால் அழும் சிறுமியின் புகைப்படம் , சிரியாவின் மீதான ஆக்கிரமிப்பு போரில் தப்பிச் செல்ல முனையும் போது படகு மூழ்கி உயிரிழந்து கவிழ்ந்த நிலையில் இருக்கும் சிறுவனின் புகைப்படம் உள்ளிட்டவை யாவும் இந்த மனித சமூகத்தின் மூளையில் ஓங்கி ஒலிக்கவில்லையா? இன்னொரு போர் வேண்டாம் என்று சொல்லவில்லையா? போரின் கொடூரத்திற்கு இன்னும் எத்தனை பிஞ்சுகளை பலி வாங்கப் போகிறீர்கள்? என்ற வினாக்களுக்கு இந்த அறிவார்ந்த மனித சமூகத்திடம் மறுமொழி இல்லை என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

முதலாளித்துவ நாடுகள்தான் இப்போரினை முன் நின்று நடத்துகின்றன , சர்வாதிகாரிகளும், கொடுங்கோலாட்சி நடத்தும் நாடுகளும் இத்தகைய போர் நடவடிக்கையில் இறங்குகின்றன என எவ்வகையிலான வாதத்தையும் புறக்கணிக்க வேண்டும். இது வளர்ச்சியடைந்த அறிவார்ந்த மனித சமூகம் தனது சக மனித சமூகத்தின் மீது பேரளவில் நிகழ்த்தும் கொடுங்குற்றச்சாட்டாக மனித்தன்மை அற்ற செயலாக முன்வைக்க வேண்டும்.



இன்றைய இளம் குழந்தைகள் நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ வேண்டுமானால் “கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்” என்ற பாவேந்தரின் முழக்கத்தை முன்னெடுப்போம்.

போர் ஒழிப்பிற்கும் உலக அமைதிக்கும் தன் வாழ்நாள் முழுவதும் போராட்டக் குரல் எழுப்பிய இந்தியாவின் முதல் பொதுவுடைமையாளர் தோழர் சிங்காரவேலர் அவர்கள் தான் இறக்கும் தருவாயில் முழங்கிய “போரில்லாத இவ்வுலகத்தில் அமைதி தவழட்டும்” என்கிற அறைகூவலே இன்றைய தலைமுறையினர் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டிய முதன்மை முழக்கமும் ஆகும்.



# ஒருவருக்கு ஒரு துப்பாக்கி தான் பாதுகாப்பு அமைச்சு கட்டுப்பாடு!

கொழும்பு, டிச. 04
தற்பாதுகாப்புக்காகத் துப்பாக்கிகளை வைத்திருக்க விண்ணப்பிப்பவர்களுக்கு அதிகபட்சமாக ஒருவருக்கு ஒரு துப்பாக்கி மாத்திரம் வழங்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தின் படி எதிர்வரும் காலங்களில் தனிநபர் ஒவ்வொருவரும் அனுமதி பெற்ற ஒரு துப்பாக்கியை மட்டுமே வைத்திருக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையும் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து வகையான துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்களை, எண்ணிக்கை சரிபார்ப்புக்காக மீளச் சமர்ப்பிப்பதற்குக் கடந்த மாதம் 21 ஆம் திகதி வரை பாதுகாப்பு அமைச்சு கால அவகாசம் வழங்கியிருந்தது. அந்தக் காலப் பகுதியினுள் கையளிக்கப்படாத துப்பாக்கிகள் அனைத்தும் சட்டவிரோதத் துப்பாக்கிகளாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
(ஜ-12)

# வரி செலுத்தும் கால எல்லை ஏழாம் திகதி வரை நீடிப்பு!




கொழும்பு, டிச 04
வரி மதிப்பீடு மற்றும் வரி சமர்ப்பிப்புக்கான கால எல்லை எதிர்வரும் 07 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருடத்துக்கான வரி மதிப்பீடு மற்றும் வரி செலுத்துவதற்கான இறுதித் தினம் கடந்த மாதம் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் கடந்த வாரம் நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் அனர்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வரி சமர்ப்பிப்புக் கால எல்லையை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் அனைத்து வகையான சமர்ப்பணங்களும் நிகழ்நிலையிலாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நிகழ்நிலையில் சமர்ப்பிப்பதற்கு தொழில்நுட்ப ரீதியான உதவி தேவைப்படுவோர் தத்தமது பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலகங்களிலோ அல்லது தலைமைக் காரியாலயத்திலோ தேவையான உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)






# மிதி வெடி

தெய்வத்தையும், தெய்வம் இருக்கிற கோயிலையும் விட ஒரு படி மேலாய் எங்கட ஆக்கள் பாக்கிறது டாக்குத்தர்மாரையும், அவையள் இருக்கிற ஆசுப்பதிரியளையும் தான்.

நான் அறிய சாவகச்சேரியில ஒரு டாக்குதரை மக்கள் கையெடுத்துக் கும்பிடாத குறை. அந்தாளக் கையெடுத்துக் கும்பிட்டாலும் தப்பில்லை எண்டு சொல்லலாம் பாருங்கோ.... இப்பத்த டாக்குத்தரச் சொல்லுறன் எண்டு யோசியாதேங்கோ.... நான் சொல்லுறது அந்தக் கால கதை...

என்ர நினைவறிஞ்சு... 30 வருசத்துக்கு முன்னமே அவரைத் தெரியும்... 1995 எண்டு நினைக்கிறன். பளை ஆசுப்பத்திரியில அந்த மனுசன் வேலை செஞ்ச காலத்தில அவரைத் "தெய்வம்" எண்டு தான் சனம் சொல்லுறது. அந்தத் "தெய்வம்" இருந்த கோயிலும் அப்பிடித்தான் இருந்தது. அந்தாளோட வேலை செய்த "நேர்ஸ்"மாரில இருந்து "அற்றெண்டன்" வரையும் அங்க தெய்வங்கள் தான். அங்க இருந்த அந்தத் "தெய்வம்" சாவகச்சேரிக்கு வந்த பின்னும் அப்படித் தான் இருந்தவர். இப்ப அவர் இல்லை. இருந்திருந்தா இந்தளவும் நடந்திருக்காது எண்டு தான் நான் நினைக்கிறன்.

அதை விடுங்கோ... ஒரு சிலபேர் இருந்தாலும் - இறந்தாலும் ஊர்சொல்லும். இப்ப நான் சொல்ல வந்தது இங்க... எங்கட பெரிய ஆசுப்பத்திரியில நடக்கிற விசியம் ஒண்டைப் பற்றி....

எல்லாரும் சேர்ந்து இழுத்தாத் தானே வண்டில் நகரும்... வண்டி எண்டா ரெண்டு சில்லும் ஒரே மாதிரி இருக்க வேணும்... இல்லாட்டி "கட்ட வண்டி... கட்ட வண்டி" எண்டு பாட வேண்டியது தான்...

பளையில இருந்த தெய்வம் மாதிரித் தான்..... கொஞ்சக் காலத்துக்கு முன்னம் யாழ்ப்பாணம் ஆசுப்பத்திரிக்கும் ஒருத்தர் பணிப்பாளரா வந்தவர். மக்களோடு மக்களாக இருந்து வந்தவர்... மக்களின் மன ஓட்டம் புரிஞ்சவர்... வலி எண்டா என்னவெண்டு தெரிஞ்சவர் எண்டதால ஆசுப்பத்திரி நிர்வாகம் அந்தமாதிரி மாறிச்சுப் பாருங்கோ....

பளையில "தெய்வம்" தன்ர அன்பால செய்ததை, அவர் இங்க அதிகாரத்தால செய்து காட்டினார்... அவருக்கு ஆயிரம் மறுபக்கம் இருந்தாலும், பணிப்பாளர் எண்ட பதவியில இருந்து கொண்டு தன்ர கட்டுப்பாட்டில இருக்கிற ஆசுப்பத்திரி நிர்வாகம், வைத்தியர்கள் முதல் பணியாளர்கள் வரை கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வந்திருந்தார். போதாக்குறைக்கு வைத்தியசாலைக்கு வெளியிலயும் கொஞ்சம் சமூக சேவை எண்டு வெளிக்கிட்டு அந்த மனுசன் கொஞ்சம், கொஞ்சமா நல்ல பேரைச் சம்பாதிச்சுக் கொண்டுது.

தனக்கு மட்டுமில்லாமல்... தான்னோட சேர்த்து வைத்தியசாலைக்கும், அங்க இருக்கிற டாக்குத்தர்மாருக்கும் நல்ல பெயர் வாற மாதிரி போன கிழமையும் வெள்ளம் பாதிச்ச இடமெல்லாத்துக்கும் தன்ர "ரீமை"க் கூட்டிக் கொண்டு போய் "மொபைல் மெடிக்கல் காம்" வச்சவர். இங்க மட்டுமில்லாமல் தன்ர ஊரான கிளிநொச்சக்கும் ஓடாத் தேஞ்சு சேவை செய்யுறார்.

ஆசுப்பத்திரி எண்டா மக்கள் நினைச்சதுக்கு நேர்மாற அந்த மனுசன் நல்ல பேரை சம்பாதிக்க மற்றப் பக்கத்தால அந்தாள் சேர்க்கிற அவ்வளவு நல்லதையும் அடிச்சு நொருக்கிக் கொண்டிருக்கினம் மற்ற ஆக்கள்...

அதான் நான் சொன்னனே? வண்டில் எண்டால் ரெண்டு சில்லும் ஒரே மாதிரி இருக்க வேணும்... இல்லாட்டி அவ்வளவு தான் பாருங்கோ....

ஆசுப்பத்திரிக்குள்ள இருக்கிறவையின்ர மனநிலையில மாற்றத்தை ஏற்படுத்தி ஒருமாதிரி அந்தால் சீர்படுத்த வெளிக்கிட வாசலில கட்டி நிக்கிறதுகள் காட்டுகிற கூத்துகளால அப்பிடியே எல்லாம் தவிடு பொடியாகிப் போகுது பாருங்கோ....

அவரவர் தகுதி, தராதரத்துக்கு ஏத்த திரித்தான் அவையவையின்ர நடத்தையும் இருக்கும் எண்டது நூறு வீதம் உண்மை பாருங்கோ....

அரசல், புரசலா கனக்கக் கதையள் காதுக்கு வாறது தான்... வழமைபோல வயித்தெரிச்சலில சொல்லினம் எண்டு நானும் பேசாமல் இந்தக் காதால கேட்டு... அந்தக் காதால விட்டு விடுறனான்.... ஆனா இண்டைக்கு காலம்பிற நடந்த சம்பவம் ஒண்டு சும்மா விட்டுட்டுக் கடந்து போக விடுதில்லை... "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" எண்டுமாப் போல.. அந்தச் சம்பவத்தை நேரில பாத்தபிறகு

அதை அலசி ஆராய்ஞ்சு... அடிச்சுத் துவைக்க வேணும் போல கிடக்கு.

வைத்தியசாலை வாசலில கட்டி வச்சிருக்கிற "கடிநா...கள்" ஆர் எவர் எண்டில்லாமல் வாய் வைக்குதுகள்... இரவில குடிச்சுப் போட்டு, காலங்காத்தால வந்து நிண்டு வம்பிளுக்குதுகள், போற வாற பொம பிளையளுக்குப் பல்லிழிச்சுப் போட்டு படியிறவையிட்ட "ரெலிபோன் நம்பர்" வாங்கிப் போட்டு வெளியிலும், உள்ளுக்குள்ளயுமா வீண் வேலையள் பாக்குதுகள்.... எண்டு ஏகப்பட்ட கதையள் வந்தது தான்...

குடிக்கிறதும், குடும்பம் நடத்துறதும் (6ஆம் பக்கம் பார்க்க...)

# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை கலையுங்கள்: வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை!

வவுனியா, டிச. 04

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு விரும்புவர்கள் செயல் திறனற்ற இந்த காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை உடனடியாகக் கலைக்கப்படவேண்டும்” என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு புதிய நியமன கோரிக்கை தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் 15 வருடங்களாக எமது உறவுகளைத் தேடி வருவதுடன் 20.02.2017 இலிருந்து தொடர் கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றோம். தொடர்ந்து வந்த அரச தலைமைகளால் காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்டு வந்ததால் சர்வதேச நீதியை வலியுறுத்தி இன்னும் போராடி வருகின்றோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டம் வரையப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பாதிக்கப்பட்டவர்களின் அபிப்பிராயங்களுக்கோ அல்லது அவர்களின் வேண்டுகோள்களுக்கோ செவி கொடுக்காது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சர்வாதிகாரத்துடன் பாரபட்சமாகவே நடத்தப்பட்டு வந்தார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடியோ அவர்களின் பங்குபற்றலுடனோ அப்பொறிமுறையைச் செயற்படுத்த முனைப்புக் காட்டப்படுவதில்லை. மாறாக நாங்கள் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சர்வாதிகாரப் போக்கும் வெளிப்படைத்தன்மையற்ற நிலையுமே காணப்படுகிறது.

‘எந்தப் பொறிமுறையும் சம்பந்தப்பட்டவர்களின் பங்களிப்போ, விருப்போ இல்லாவிட்டால் வெற்றியளிக்காது’ என்ற கூற்றை ஏற்றுக் கொள்ள எவரும் தயாரில்லை.

1. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டம் உருவாக்குவதற்காக, பாதிக்கப்பட்டவர்களின் கருத்தறிய ஏற்படுத்தப்பட்ட கலந்தாலோசனைச் செயலணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் எவ்வித ஊதியமும் இன்றி ஊர் ஊராகச் சென்று கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்து பரிந்துரைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் வரை அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்தோம்.

பரிந்துரைகள் கையளிக்கப்படுவதற்கு முன்னரே அவசர அவசரமாக வரையப்பட்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய சட்டமூலத்தில், எமக்கு உடன்பாடில்லாத விடயங்களைச் சுட்டிக்காட்டி சில திருத்தங்களை செய்யும்படி கேட்டிருந்தோம்.

ஆனால் அதற்குரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அது மாத்திரமல்ல கலந்தாலோசனைச் செயலணியால் பரிந்துரைக்கப்பட்டவையில் முக்கியமான பரிந்துரைகள் பல கருத்திற் கொள்ளப்படவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2. பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எதையும் எடுக்காதது மட்டுமல்லாது, எமது எதிர்ப்பையும் மீறி காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் திறப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் உறுதியுடன் இருந்தார்கள்.

அதனால் யாழ்ப்பாணத்தில் அதிகாலை 4.30 மணிக்கும், கிளிநொச்சியில் ஊரடங்கு அமுலில் இருந்த நேரத்திலும் அலுவலகத்தைத் திறந்தார்கள்.

3. 30/1 தீர்மானத்தின்படி, உண்மை, நீதி, இழப்பீடு, மீள் நிகழாமை ஆகிய நான்கு தூண்கள் முக்கியமானவை எனக் கூறப்பட்டது. ஆனால் உண்மையை கண்டறிந்தபின் அவ்விடயம் நீதிப்பொறிமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஆரம்பித்து ஏழு வருடங்கள் ஆகின்ற போதும் ஒரு உண்மை தானும் கண்டறியப்படவில்லை. ஆனால் அதற்குள் நீதியை ஓரங்கட்டிவிட்டு இழப்பீட்டு அலுவலகம் திறக்க வேண்டிய தேவை என்ன? உண்மையை கண்டறியாமலே காசை எறிந்து ஏழைகளின் வாயை மூடி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதற்காகவா?

4. பன்னாட்டு தூதுவர்களுக்கு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் எமக்குள்ள திருப்தியீனம் தொடர்பில் காரணங்களுடன் தெரிவிக்கும்போது அவர்கள் ஒருதடவை அதனுடன் இணைந்து செயற்பட்டு பாருங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், அவர்களுக்கு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் செயல்திறன் தொடர்பில் புரியவைப்பதற்குமாக 20.07.2019 இல் உண்மையை கண்டறிவதற்காக நாம் ஒப்படைத்த ஐந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விபரங்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதது மட்டுமல்ல அவற்றை தொலைத்துவிட்டு மீள பிரதியை கோரி நின்றமையானது இந்த அலுவலகம் எவ்வளவு பொறுப்பின்மையுடன் நடந்து கொள்கின்றது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

உண்மையிலேயே எமக்கு எமது உறவுகளின் ஆவணங்கள் உயிர்மூச்சு. ஆனால் அவர்களுக்கு அவை வெறும் காகிதம் மட்டுமே. இதுவே பாதிக்கப்பட்ட ஒரு உறவாக இருந்தால் அவருக்கு எம் வலி, தவிப்பு, அதன் பெறுமதி புரிந்திருக்கும்.

கடந்தகால அனுபவமும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மற்றும் அரசாங்கம் எம்மை நடாத்திய விதமும் எம்மைச் சோர்வடையச் செய்துள்ளதோடு, மீளவும் மன அதிர்வுக்கு உள்ளாக்கியுள்ளன. அவை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஒரு போலியான பொறிமுறை என்ற முடிவுக்கு வருவதற்கு எம்மைத் தள்ளியுள்ளன.

உண்மையாகவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு விரும்புவார்களாயின் செயல் திறனற்ற (5ஆம் பக்கம் பார்க்க..)



# திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். கடற்தொழிலாளர்களை விடுவிக்க வேண்டுகோள் !

யாழ்ப்பாணம், டிச. 04

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனலைதீவு கடற்தொழிலாளர்களை விடுவிக்க வேண்டும் என அவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி அனலைதீவில் இருந்து கடற்தொழிலுக்கு படகு ஒன்றில் சென்ற இரு கடற்தொழிலாளர்களும், கடல் சீற்றம் காரணமாக தமிழக கடற்பரப்பினுள் தத்தளித்த நிலையில், தமிழக கடற்தொழிலாளர்களால் மீட்கப்பட்டு தமிழக கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கபப்ட்டிருந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அதன் பின்னர் அவர்கள் இருவரும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நோக்குடன் திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் உறவினர்கள், ஊர்காவற்துறை பகுதியில் ஊடகவியலாளர்களை சந்தித்த போது, கடல்சீற்றம் காரணமாக தமிழக கடற்பரப்பினுள் சென்ற அனலைதீவை சேர்ந்த திருச்செல்வம் மைக்கல் பெர்னாண்டோ மற்றும் நாகலிங்கம் விஜயகுமார் ஆகிய இருவரும் தற்போது நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் , அவர்களின் படகு மற்றும் அதன் வெளியிணைப்பு இயந்திரத்துடன் கடல் வழியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர். (ஐ-04)

# கல்முனை வைத்தியசாலைப் பணிப்பாளராக மருத்துவர் கே.சுகுணன் இன்று பதவியேற்பு!

( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக மருத்துவர் குணசிங்கம் சுகுணன் இன்று புதன்கிழமை பதவியேற்றார்.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் பணியாற்றி வந்த இவர், கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராகக் கடமையாற்றினார். அதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக கடமையாற்றிய இவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராகவும் பணியாற்றி உள்ளார்.

வவுனியாவில் இருந்து கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இன்று புதன்கிழமை காலை அவர் தனது கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டார். (ஐ)



## காணமற்போன...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)இந்த காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் உடனடியாகக் கலைக்கப்படவேண்டும் என்பதுடன் எமது உறவுகள் சரணடைந்த, கையளிக்கப்பட்ட, கைது செய்யப்பட்ட முக்கியமான நான்கு காவ லரண்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் விசாரிக்கப்பட்டு உண்மை அறியப்பட வேண்டும்.

எமது உறவுகளைக் காணாமலாக்கிய இராணுவ அதிகாரிகள் தற்போதும் உயிருடனும் பதவியிலும் உள்ளார்கள். அவர்களை உடனடியாக விசாரிப்பதன் மூலம் உண்மையை கண்டறிய வேண்டும். அதுவே காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வந்த எமக்கு நல்லெண்ண சமிக்ஞையாக இருக்கும்.

அதை விடுத்து எம்மால் நிராகரிக்கப்பட்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு புதியவர்களை உள்வாங்க ஆட்சேர்ப்பு செய்ய முனைவதானது எம்மை தொடர்ந்து ஏமாற்றவே சகலரும் முயற்சிக்கிறார்கள் என்ற உணர்வை பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது.

மாற்றம் எனும் கோஷத்துடன் பதவி ஏறிய புதிய அரசு, பழைய சிங்கள அரசுகள் போலவே தான் தமிழ் மக்களின் மிக முக்கியமான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனையை அணுகவுள்ளது என்பதையே காட்டுகின்றது.

சர்வதேச நீதி பொறிமுறையையே எமது பிரச்சனைக்கான தீர்வாகும். நாம் தொடர்ச்சியாக சர்வதேச நீதியை நோக்கியே போராடி வருகின்றோம்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-12)



# மிதிவெடி

அவரவர் தனிப்பட்ட விசியம்... ஆனா ஆசுபத்திரியில அடாவடித்தனம் பண்ணுறதை எப்பிடி ஏற்றுக் கொள்ள ஏலும்...?

இண்டைக்குக் காலம்பிற பக்கத்து வீட்டுககார பார்வதிப் பாட்டி "வோட்"ல இருக்கிறா... ஒரு எட்டுப் பாத்துட்டு வருவமெண்டு நானும், மனுசியுமா வெளிக்கிட்டு போனம்... நேரம் சரியா 06:15. அந்தரப்பட்டு அவசரப்பட்டு "பஸ்" பிடிச்சு வந்த சனமெல்லாம் அடிச்சுப் பிடிச்சுக் கொண்டு பார்வையாளரை விடுற பக்கத்தால போய்க் கொண்டிருந்திச்சினம்.

நாங்களும் அந்த நேரம் போய் நிக்க... ஒரு வயசான பொம்பிளைய வைச்சு வாசலில காவலுக்குக் கட்டி நிண்டவர் கேளாக் கேள்வி கேக்கிறார்...

எங்கயன் விடுப்பெண்டா எனக்குக் காணுமே? மனுசிய "வோட்"க்கு போகச் சொல்லிற்று ஓரமா நிண்டு வேடிக்கை பார்த்தன்....

"மத்தியானம் இங்காலப் பக்கம் வந்தியோ... இந்தப் "பாஸ்"ஐக் கிழிச்சு எறிவன்... எண்டு அங்க நிண்ட இளந்தாரி ஒருத்தர் அந்த மனுசிய ஆக்களுக்கு முன்னால வைச்சு பேசுறார்...

நடந்தது இதுதான்....

அந்த அம்மா மட்டக்களப்பில இருந்து வந்திருக்கிறா... அந்த மாகாணத்தின்ர ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர். அங்க உப்பிடி எத்தின பேரைக் கட்டி ஆண்டிருக்கும் அந்த மனுசி... எல்லாம் கால நேரம் பாருங்கோ... இரவோடிரவா அங்க இருந்து "பஸ்" பிடிச்சு காலம்பிற மூண்டு மணிக்கு இங்க வந்திறங்கி-னவா... தன்ர சொந்தக்காரப் பிள்ளை ஒண்டைப் பாக்க வேணும் எண்டு மூண்டு மணித்தியாலமா அந்த வாசலிலயே இருந்துண்டு ஆக்கள விடத் தொடங்க உள்ளுக்கை போயிருக்கிறா... இங்கத்தை "சிஸ்ரம்" அவவுக்குத் தெரியாது தானே?... போனவாவிட்ட "பாஸ்" கேட்டிருக்குது வாசலில நிண்டதுகளில ஒண்டு...

"பாஸ்" இல்லை. மட்டக்களப்பில இருந்து வாறன் எண்டு சொன்னவாவ கேளாக் கேள்வி எல்லாம் கேட்டுப் போட்டு "ஓரமாப் போய் நில்லு" எண்டு சொல்லியிருக்கினம்... என்னதான் இருந்தாலும் படிச்ச மனுசியெல்லே... எந்த இடத்தில எப்பிடி நடந்து கொள்ள வேணும் எண்ட இங்கிதம் தெரிஞ்சவா... பேசாமல் நிண்டிருக்கிறா...

"வோட்"ல நிக்கிற பிள்ளையின்ர தகப்பன் அந்த இடத்துக்கு வந்து... தான் போகாமல் தன்னுடைய "பாஸ்"ஐ இந்த மனுசிட்ட குடுத்து "நீங்க போய்ப் பாத்துட்டு வாங்கோ... இவ்வளவு தூரமிருந்து வந்திருக்கிறீங்கள்" எண்டு சொல்லி அனுப்பியிருக்கிறார்.

அந்த அம்மா... கையில "பாஸ்"ஐயும் கொண்டு திரும்ப அந்த "காவல் காரனிட்டை" போயிருக் கிறா... "உதென்ன... இப்ப தானே பாஸ் இல்லை எண்டனீ? எங்கயிருந்து கள்ளப்பாஸ் கொண்டு வாறாய்.... அங்கால போ.." அது, இதெண்டு குரைச்சுப் போட்டு அங்கால கதிரை ஒண்டில இருந்து கடலை போட்டுக் கொண்டிருந்த ஒரு இளந்தரியாரிட்ட அனுப்பி இருக்கிறார்.

அவருக்கோ... இவாவோட கதைக்கவே இஷ்டமில்லை... தன்னைச் சுத்தி "சுரி-தார்" போட்டுக் கொண்டு வந்து "பாஸ்" இல லாம நிண்டு கண்ணாலும், மூக்காலும் கதை பேசுறவயிட்ட "குசலம்" விசாரிச்சு.... "ரெலிபோன் நம்பர்" வாங்கிப் போட்டு அவைய அனுமதிக்கிறதில "கருமமே கண்ணா"யிருந்தவருக்கு அறுபதைத் தாண்டின இந்த அம்மா போய் நிண்டது இடைஞ்சலாப் போட்டுது போல....

"உங்கட சேட்டையள் இஞ்ச செல்லாது... ஆர்... பேசன்ற்? எத்தினையாம் வோட்? இந்தப் பாஸ் எப்பிடி உனக்கு வந்தது?" எண்டெல்லாம் விலாவாரியா விசாரிச்சுப் போட்டு "மத்தியானம் நீ இந்தப் பாஸோட வந்தால் கிளிச்செறிவன்..." எண்டு சொல்லிப் போட்டு போக விட்டார்.

இவ்வளவையும் நேரில பாத்துக் கொண்டிருந்த எனக்குப் பத்திக் கொண்டு வந்தது... எண்டாலும் மனுசியோட வந்த இடத்தில வம்புக்குப் போனன் எண்டா ரெண்டு நாளைக்குச் சாப்பாடு தெருவல தான்.. அதால அங்க பேசாமல் நிண்டுட்டு வந்துட்டன்.

அதைவிட, அதுகளோட நான் வாய் குடுக்கப் போக சுத்தி நிக்கும் கன்னிகையர் கூட்டத்துக்குப் "படம்" போடுறதுக்காக என்னையும் எப்பிடியும் அவமானப்படுத்திப் போடுவாங்கள்... இரவு குடுச்ச வெறி கூட முறியாமல் தான் நிக்கிறாங்கள் போலவும் இருந்துச்சு பேசாமல் வந்துட்டன்.

ஆனா... என்ர கேள்வி என்னெண்டா...

அவரவரர் வேலைய அவரவர் பாக்க வேண்டியது தானே?

"பாஸ்" ஏன் குடுக்குறியள்? ஆர் எண டாலும் வலுவில உள்ள "பாஸ்" கொண்டு வந்தா பாதுகாப்பு அலுவலருக்கு விசாரணை என்ன வேண்டிக் கிடக்கு?

"சல்வார் - சுரிதார்" போட்டுக் கொண்டு வந்து "போன் நம்பர்" தாற இளவட்டங்கள் "பாஸ்" இல்லாமலே போகலாம் எண்டா, பிறகேன் உந்த "பாஸ் சிஸ்ரம்" ?

அங்க நிக்கிறதுகளுக்குக் கதைக்கப் பேசத் தெரியாது எண்டது உண்மை. வைத்தியசாலைக்கும் தனியார் பாதுகாப்புச் சேவைக்கும் தொடர்பு இல்லை எண்டது உண்மை. எல்லாம் சரி தான். ஆனா... உங்கட வைத்தியசாலையில வேலை செய்யுறவை எப்பிடி பொது சனத்தோட நடந்து கொள்ள வேணும் எண்டதை நீங்கள் தானே பாக்க வேணும்?

ஐயா, பணிப்பாளரே இவையனைத்தும் உங்கள் கவனத்துக்கு!

-நரமுனி-






## கடந்தகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிதாக வந்திருக்கக்கூடிய அனுர அரசாங்கமானது இனவாதம் மதவாதம் போன்றவற்றிற்கு இந்த நாட்டில் இடமில்லை என்று கூறுகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அவர்களுக்குக் கிடைத்த பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் இனவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்ற சாரப்படவும் பேசுகின்றனர்.

அனுர அரசாங்கமும் ஜேவிபியும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆட்சிப்பீடமேறிய அனைத்து அரசாங்கங்களும் பல்வேறுபட்ட வழிமுறைகளில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வந்தனர். இதன் காரணமாக அன்றிலிருந்து இன்றுவரை மாறிமாறி வந்த அரசாங்கங்களின் தமிழர் விரோத கொள்கைகளிலிருந்து தமிழ் மக்கள் தம்மை தற்காத்துக்கொள்ள அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய நிலையும், போராட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தம்மைத் தற்காத்துக் கொள்ள அவர்கள் எடுக்கும் முயற்சிகள் இனவாதம் ஆகாது. மாறாக தமிழ் மக்களது மொழியை, கல்வியை, கலாசாரத்தை, மத நம்பிக்கைகளை அழிக்க வேண்டுமென்றும் சிங்கள குடியேற்றங்களினூடாக அவர்களின் இருப்பை இல்லாமல் செய்ய வேண்டுமென்றும் நடைபெற்ற அனைத்துமே சிங்கள மேலாதிக்க இனவாதத் தன்மை கொண்டவை. இவை அகற்றப்படவேண்டும் என்பதில் எமக்கும் மாற்றுக்கருத்தில்லை. கடந்த ஏழு வருடங்களாக மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை. இதன் காரணமாக மாகாணசபைக்கு உரித்தான அனைத்து அதிகாரங்களும் கொழும்பிலிருக்கின்ற மத்திய அரசாங்கத்தாலேயே கையாளப்படுகின்றது. இப்பொழுது வந்திருக்கின்ற அரசாங்கமும் கூட மாகாணசபை தேர்தல்களை விரைந்து நடாத்துவதற்கான எவ்வித ஆயத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் 2025ஆம் வருட இறுதியிலோ அல்லது அதற்குப் பின்னராகவோ மாகாணசபைத் தேர்தல்களை நடத்தலாம் என்று கூறுகிறது.

மறுபுறத்தில் புதிய அரசியல் சாசனத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அகற்றுவோம் இது தேவையற்ற ஒரு விடயம் என்ற முடிவை ஜனதா விமுக்தி பெரமுன கட்சியின் செயலாளர் ரில்வின் டி சில்வா உறுதிபடக் கூறுகின்றார்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை முன்மொழிய மறுக்கும் பிரதமரோ ஜனாதிபதியோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ பதின்மூன்றாவதை இல்லாமல் செய்வோம் என்பதை தெளிவுபடக் கூறுகிறார்கள். இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இன, மத பேதங்கள் இல்லை என்றும் நாங்கள் எல்லோரும் இலங்கையர்கள் என்றும் கூறுவதனூடாக தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்றும் கூற முற்படுகின்றார்கள். இடதுசாரிகள் என்று சொல்வதன் காரணமாக மாத்திரம் இவர்கள் சமத்துவத்தையும் நீதியையும் தமிழர்களுக்கு அளித்துவிடுவார்கள் என்பது அர்த்தமற்ற ஒரு பொய்ப்பிரசாரமாகும். தேசிய மக்கள் சக்தியானது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று நம்பக்கூடிய தமிழ் புத்திஜீவிகள், கல்வியாளர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் இந்த வரலாற்றை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினராகிய நாம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை ஒன்று இருக்கின்றதென்பதை ஏற்றுக்கொண்டு அதற்கான தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது எமது முதலாவது கோரிக்கையாகும்.

அந்தத் தீர்வு எட்டப்படும் வரையில் மாகாண சபைகளுக்கு உரித்தான பதின்மூன்றாவது திருத்தம் என்பது முழுமையாக அமுல்படுத்தப்படுவதுடன் மாகாணசபைத் தேர்தல்களும் மிக விரைவாக நடத்தப்பட்டு மக்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடம் மாகாணசபை நிர்வாகங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் ஒன்று மட்டுமே தமிழ் மக்கள் கைவசம் இருக்கக்கூடிய ஒரேயொரு பாதுகாப்பு அரணாகும்.

டொனாமூர் அரசியல் யாப்பிலிருந்த 29ஆவது சரத்தை அழித்தொழித்தது போல மாகாணசபை முறைமையையோ அல்லது அதற்கான அதிகாரங்களை வழங்குகின்ற பதின்மூன்றாவது திருத்தத்தையோ இல்லாதொழிக்க நாங்கள் அனுமதிக்கக்கூடாது.

முப்பத்தேழு வருடங்களாக இந்த மாகாணசபையால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றும் சிலர் கூறுகின்றார்கள். ஆனால் 1988ஆம் ஆண்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்ட போதும்கூட 2009ஆம் ஆண்டுவரை இந்த நாட்டில் ஒரு யுத்தம் நடைபெற்றது. ஆனால் 2009ஆம் ஆண்டிற்குப் பின் ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கங்களும் மாகாணசபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமலும் அதனை ஒத்தி வைப்பதுடன் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தாமலும் காலத்தை ஓட்டினார்களே தவிர மாகாணசபை முறைமையை உயிர்த்துடிப்புடன் செயற்படுத்துவதற்கான எந்த அக்கறையையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை.

பதின்மூன்றாவது திருத்தத்தைப் பற்றிப் பேசினால் புனிதம் கெட்டுவிடும் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்ற கற்பனாவாத கதைகளைக் கைவிட்டு தமிழ் மக்கள் விரும்புகின்ற ஒரு அரசியல் சாசனம் வரும்வரையில் பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் அதற்காகக் குரல்கொடுக்க முன்வரவேண்டும்" என்று உள்ளது.

## சமுக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புத்தகத்தில் பகிரப்பட்ட விடுதலைப் புலிகள் தொடர்பான படத்தை மீளப் பகிர்ந்ததாகவும், அதனால் பொது மக்களிடையே அமைதியின்மை ஏற்படக் காரணாமாகினார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் போது, சந்தேகநபர் தனது முகப்புத்தகத்தில் படங்களை மீள் பகிர்வு செய்தமை பொது அமைதியின்மைக்கு எவ்வாறு வழிவகுத்ததென குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் நீதவான் கேள்வி எழுப்பினார்.

மேலும், பொது அமைதியின்மை ஏற்பட்டமைக்கான ஆதாரங்களை வழங்காமல், போதிய சாட்சியங்கள் இன்றி சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க முடியாது என நீதவான் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சமூக செயற்பாட்டாளர் கெலும் ஜயசுமணவுக்கு பிணை வழங்கிய கொழும்பு நீதவான், வழக்கு விசாரணையை அடுத்த வருடம் ஏப்ரல் 03 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ-12)




இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2024 இல் வெளியிடப்பெற்றது.